செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவ

# இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ஆு (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அ௦] பார்ப்பாளர்:- கீலக ஞு ஆடி மீ உரு உ வெள்ளிக்கிழமை (9-8-1968) [இல-க.

## சைவ சமய வுண்மைகள்

[ சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்களுடைய கருத்துக்களைத் தழுவி மாவை மா. சிதம்பரப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை ]

**சைவ சமயம்:** (I)

சைவ சமயமே மெய்ச்சமயம். இச் சமயம் காலவரையறைக்கு அப்பாற்பட்டது. வேதம் ஆகமம் இரண்டினாலும் அரண் செய்யப்பட்டது. இவை இரண்டையும் முற்றாக அறியாமல் சிவசம்பந்தம் பெறுவது அரிது. ஆகமங்கள் சிறப்பு நூலாகவும், வேதம் பொது நூலாகவும் உள்ளன என்பதும், வேதங்கள் உலகர்க்கும் ஆகமங்கள் சத்திநிபாதர்க்கும் உரைக்கப்பட்டன என்பதனையும் அறிய வேண்டும். ஆகமங்கள் பயில்வோர் வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் முன்னர்ப் பயிலவேண்டும். மறைகள் ஆகமங்களி னுட்பட்டன.

**நாவலர் பெருமான்:**

முந்தை அறிவின் தொடர்ச்சியினால் நம் முதல்வனை நாம் வணங்கும் பாக்கியம் பெற்றுள்ளோம். இறைவன் அருள் பாலிக்கும் இடம் ஆலயம். அடியார்கள் வழிபட வேண்டிய முறைகளைச் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் சைவ வினாவிடை மூலமாக விளக்கியுள்ளார். இடையிடை நாம் எம நினைவுக்குக் கொண்டு வரவேண்டிய சில முக்கிய விடயங்களைக் கவனிக்க வேண்டும்.

**பசு காத்தல்:**

திருத்தொண்டர் புராணத்தில், சண்டேசுர நாயனார் புராணம் ஓர் சிறந்தபகுதி. விதிமுறையாக அமைக்கப்பட்ட ஆலயங்களில், சண்டேசுர நாயனாரும் எழுந்தருளியிருக்க ஆலயம் அமைக்கப் பெற்றிருக்கும். இந்நாயனாரை நாம் வணங்கும்போது.

தங்குமகில யோனிகட்கு மேலாம்பெருமைத் தகைமையன
பொங்குபுனித தீர்த்தங்களெல்லா மென்றும் பொருந்துவன
துங்கவமரர் திருமுனிவர் கணங்கள்சூழ்ந்து பிரியாத
அங்கமனைத்துந் தாமுடைய வல்லவோநல் லானினங்கள். 1224

என்று சேக்கிழார் பெருமான் பசுக் கூட்டங்களைப் பாடிய திருப்பாட்டு ஞாபகத்துக்குக் கொண்டு வருதல் வேண்டும். இத் திருப்பாவின் வெளிப்படையான பொருள்: (உயிர்கள் தங்கும்) எல்லா யோனிகளுக்கும் மேலாகிய பெருமைத் தன்மையுடையன; பொங்குகின்ற தூய தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்தப்பெற்றன; பெருமையுடைய தேவர்களும் முனிவர் கூட்டங்களும் சூழ்ந்து இருக்கை கொண்டு பிரியாத அங்கங்களையும் உடையன ஆனினங்கள் அல்லவோ? என்பதாம்.

**சிவபூசை:**

இன்னும் இந் நாயனாரை வணங்கும்போது சிவபூசையின் தன்மையையும் தமமை மறந்த பத்தி முதிர்ச்சியையும் ஏழு ஆண்டு நிரம்பிய பாலகனுடைய காட்சியையும் மனக்கண்ணால் கண்டின்புறலாம். இதனைப் படம் பிடித்துப் பின்வருமாறு கூறுகின்றார் சேக்கிழார் பெருமான்:

பூதகணங்கள் புடைசூழப் புராணமுனிவர் புத்தேளிர்
வேதமொழிக ளெடுத்தேத்த விமலமூர்த்தி திருவுள்ளங்

( தொடர்ச்சி 2-ம் ஆம் பக்கம் )

## நல்லை. திருஞான சம்பந்தர் ஆதீனம்

நல்லைநகரில் விளங்கும் திருஞானசம்பந்தர் ஆதீனத்தினது ஆண்டுப் பூர்த்தி விழா நல்லைக் கந்தன்கோயில் திருக்கார்த்திகைத் திருவிழாவாய (16-8-68) வெள்ளியன்று ஷை ஆதீனத்தில் வழமைபோலச் சிறப்புற நிகழத் திருவருள்கூட்டியுள்ளது. அன்று அதிகாலையிலிருந்து பூசை, வழிபாடு, ஆராதனைகள், சொற்பொழிவுகள் ஆகியாம் பல அருள்நிகழ்ச்சிகள் இடம்பெறும். (ந.நி.)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

நாயேன்பலநாளு நினைப்பின்றி
மனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்
பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்
தென்பால் வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
ஆயாவுனக்காளாயினி
யல்லேனெனலாமே.

திருச்சிற்றம்பலம்
- சுந்தரமூர்த்திசுவாமிகள்.

### நாவலர் நல்வாக்கு

உன் உள்ளத்திலே செல்வ மிகுதியால் அகந்தை தோன்றுமாயின், உன்னின் மிக்காருடைய செல்வத்தையும், வறுமை மிகுதியால் துக்கந் தோன்றுமாயின், உன்னின் இழிந்தாருடைய வறுமையையும் நினை; நினைப்பாயாகில் அகந்தை, துக்கங்கள் உன்னை எக்காலத்தும் அணுகாவாம்.

### நாவலர் சிலை

நாவலர் பெருமானுக்குச் சிலை நிறுவுவதையும் அவருடையநினைவாகப் புரியவேண்டிய பணிகளை மேற்கொள்வதையும் முடிவு செய்தற்குரிய வழிவகைகளைத் தீர்மானஞ் செய்யக் கொழும்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையினது கூட்டமொன்று 21-8-68 புதன் கிழமை பி. ப. 4 மணிக்கு வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெறும். ஷை கூட்டத்தில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, வித்துவான் க. கி. நடராஜன், வித்துவான் பொன் முத்துக்குமாரன், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் உரையாற்றுவார்கள். பிரபல வர்த்தகரும், சமாதான நீதவானுமாகிய திரு. இ. சண்முகம் ரூபா. 2500/- வழங்கயுள்ளார். அத்தொகையுடன் இதுவரை ரூபா. 22500 ஷை நிதிக்குச் சேர்ந்துள்ளதாக அறிகின்றோம். ——

### நல்லைக் கந்தசுவாமி கோவில்

(16-8-68) வெள்ளி கார்த்திகை உற்சவம்.
(18-8-68) ஞாயிறு கைலாய வாகன திருவிழா
(20-8-68) செவ்வாய் பிற்பகல் தெண்டாயுதபாணித் திருவிழா

## சிவன் தந்த செல்வம்

"மனிதன் பிறக்கும்பொழுது யாதொரு செல்வமும் கொண்டு வரவில்லை. அவன் இறக்கும்பொழுது செல்வத்தை ஒருபோதும் கொண்டு செல்லமுடியாது. அவன் வைத்திருக்கும் செல்வம் உலகில் வாழுங் காலத்தில் சிவபெருமானால் கொடுக்கப்பட்டது. ஆகவே அச் செல்வத்தை ஒருவன் தன்னுடைய செல்வமென ஒருபொழுதும் எண்ணக்கூடாது. அது சிவனுடைய சொத்து. சிவபெருமான் அச் செல்வத்தைத் தன்னிடம் பாதுகாக்க உதவினரென அவன் உணர்தல் வேண்டும். அச் செல்வத்தைப் பிறருக்கு தேவையறிந்து உதவ வேண்டும்"

இவ்வாறு பட்டினத்தடிகள் கூறினரென யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் 6-8-68 செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் பட்டினத்தடிகள் குருபூசைவிழாவில் தலைமைவகித்த முதலியார் செ. முத்துத்தம்பி அவர்கள் தமது தலைமையுரையில் கூறினர். முற் கூறப்பட்ட கருத்துக்களை உடைய செய்யுள்

"பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லைப் பிறந்து மண்மேல்
இறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன் றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லுகேன் கச்சியேகம்பனே

இச் செய்யுளை விளங்கினவர்கள் பட்டினத்தடிகள். பெருந் தொகைப் பணத்தைத் தேடி வைத்துவிட்டு, பிறருக்கு உதவாத மக்களைக் கண்டிக்கின்றார். பணத்தைத் திரட்டி வைத்திருக்கின்ற முதலாளி வர்க்கத்தாருக்கு இச் செய்யுள் ஒரு சிறந்த உபதேசமாகும்.

நாத்திகம் பேசுகின்ற பொதுவுடைமை வாதிகள் இச் செய்யுளைப் படித்தால ஆத்திகராவர் என்று கூறினர். சபையின் சமயப் பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனமும் வித்துவான் க. கணபதிப்பிள்ளை B. A. அவர்களும் பட்டினத்தடிகளைப்பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள். ——

## கிளியூர் சிவாலயமும் திரு. செல்லப்பன் சபதமும்

["இந்துசாதனம்" அபிமான நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிதம்பரம், தென்னிந்திய]

தென் இந்தியாவில் பிரபல சேஷத்திரமான திருவண்ணாமலை என்ற சிவஸ்தலத்திற்குக் கீழ்பால், திருக்கோயிலூர் தாலுக்காவிலுள்ள கிளியூர் என்ற சிற்றூரில், திருக்கோயில் இல்லாமலும் நித்திய பூசைகள் இல்லாமலும் சிவலிங்கப்பெருமான்கோயில் கிலமுற்றுக் கிடந்து வருவதைக் கண்டு தினமும் மனக்கவலை அடைந்து கொண்டு வந்த மாஜி இராணுவத்தினரான திரு. செல்லப்பன் என்பவர் சிவலிங்கப்பெருமானுக்கு புதிதாக ஆலயம் அமைத்து மகாகும்பாபிஷேகம் செய்யும்வரையில் வேஷ்டியுடுத்துக்கொள்ளுவதில்லை, குடும்பத்திற் கால் வைப்பதில்லை என்று சபதம் மேற்கொண்டு 20-4-1956-ல் திருக்கோயில் கட்ட முற்பட்டு இதுவரையில் சுவாமி அ... பாள் தூக்கை சந்நிதான... கள் சுமார் 57 ஆயிரம் ரூப... நிதி திரட்டி கட்டியுள்ளா...

ஷை திருக்கோயில் வேலைக... பூர்த்திபெற்று மகாகும்பா... ஷேகம் செய்வதற்கு ரூப... 10 ஆயிரம்வரையில் தேவை... ப்படுகின்றது. சிவாலயம் கட்... டி மகாகும்பாபிஷேகம் செ... வதற்கு சபதம் மேற்கொண்... டுள்ள திரு. செல்லப்ப... அவர்கள் சாதாரணகுடும்ப... த்தைச் சேர்ந்தவராகஇருந்து... தனனுடைய சொத்துக்க... விற்பனை செய்து ரூபா 1... ஆயிரம் வரை திருக்கோயி... கட்டுவதற்காக செலவு செ... துள்ளார்.

ஆகவே இத் திருப்பணி... ளுக்கு நிதியுதவி புரியு...

( தொடர்ச்சி 4-ம் பக்கம் )

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

# இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

கீலக ஞு ஆடி மீ உடு - உ வெள்ளிக்கிழமை [1968]


## ஆலயங்கள் தவத்துக்குரிய தானங்கள்

கொழும்பு இந்துவாலிபர் சங்கம் கதிர்காம க்ஷேத்திரத்தின் புனிதத்தைப் பாதுகாக்கும்படி விண்ணப்பித்து தமிழிலும் சிங்களத்திலும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டிருக்கின்றது. 'பைலா' நடனங்களும் மதுபானம் அருந்துதலும் மாமிசம் புசித்தல் முதலிய பாவச் செயல்களும் அங்கு நீக்கப்பட வேண்டும் என்று மேற்படி சங்கம் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் கேட்டிருக்கின்றது. வடக்கு - கிழக்கு மாகாணங்களிலும் சில கோயில் உற்சவங்களிலும் ஏனைய விழாக்களிலும் பக்தி மார்க்கத்துக்கு மாறான வகையில் கேளிக்கைகள் அதிகரிக்கின்றன. கூத்துக்கள் தாசிகள் நடனங்கள், 'சினிமா' இசைத் தட்டுகளை ஒலிபரப்பிகளில் பரப்புதல், கதம்ப நிகழ்ச்சிகள் என்பன தவிர்க்கப்படல் வேண்டும். இத்தகைய நிகழ்ச்சிகள் சிற் சில கோவில் விழாக்களில் இடம்பெறுவதால் மக்கள் இறைவனை பயபக்தியுடன் வழிபடுதலுக்குத் தடையாயிருக்கின்றன. பொதுவாகச் சனங்களுக்கு வேடிக்கைகளிற்றான நாட்டம் இக் காலத்தில் அதிகரித்து வருகிறது. அடக்கமாகவும் மன ஒருமைப்பாட்டுடனும் கடவுளை வழிபடுதலில் அவர்களுடைய மனஞ் செல்லாது. ஆலய வழிபாடு புரிகின்றவர்கள் சரியைத் தொண்டுகளிலீடுபடுதல் ஆலயத்தினது புனிதத் தன்மையை விருத்தி செய்யும்.

வருகிற 11-8-68 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணியளவில் முதியவராகிய பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர் அவர்கள் நல்லூர் தீர்த்தத் திருக்குளத்தடி தண்டாயுதபாணி கோயிலிலிருந்து சுவாமி கோயிலுக்குக் காவடி யெடுக்கப் போகின்றனர். நல்லூர் வெளிவீதியில் அவருடைய 86-ஆம் வயதிலும் அங்கப் பிரதக்ஷிணம் புரிகின்ற நியதியுடையவர். அவர் சிறந்த முருக பக்தர். அவருடைய இளமைப் பருவத்தில் கதிர்காமத்துக்குப் பாத யாத்திரை செய்திருக்கின்றார். கதிர்காம சுவாமி கோயில் வெளி வீதியிலும் அங்கப் பிரதக்ஷிணஞ் செய்துள்ளார். இவ் வண்ணமான சரியைப் பணிகள் ஒருவனுக்குச் சீவத் தன்மை நீக்கி சிவத் தன்மையையளிக்கும். இக்காலத்து இளம் வாலிபர்களுக்கு இப்பெரியாருடைய சரியைத் தொண்டு ஒரு முன் மாதிரியாக விருக்கக் கடவதாக. ஆலயங்களில் பூமியின்கண் விழுந்து அட்டாங்க நமஸ்காரத்தையோ அல்லது பஞ்சாங்க நமஸ்காரத்தையோ புரிந்து இறைவழிபாடாற்ற வெட்கப்படுகின்றவர்கள் இவ் விருத்தாப்பிய அந்தணோத்தமருடைய தவச் செயல்களைப் பின்பற்றுவார்களாக. ——::——

## திருமுறைப் பண் பயிற்சி வகுப்பு

——0——

8-8-68 வியாழக்கிழமை மு. ப. 9-30 மணியளவில் வலிகாமம் மேற்கு சித்தன்கேணி கணேச வித்தியாசாலை மண்டபத்தில் காஞ்சிபுரம் மெய்கண்டாராதீன வித்துவான் தேவாரமணி இன்னிசைச் செல்வர் திரு P. A. S. இராஜசேகரன் மேற்படி வகுப்பொன்றை ஆரம்பித்தனர். வகுப்பில் சேர்ந்து படிக்கத் தகுதியுடையவர்கள் அன்று தெரிவு செய்யப்பட்டார்கள். பெண்களுக்கும் ஆண்களுக்கும் வகுப்புகள் வெவ்வேறாக நடத்தப்படும். வலிகாமம் மேற்கிலுள்ள திருமுறை அபிமானிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வார்களாக. ——::——

## 'ஸ்ரீ முன்னேஸ்வர வரலாறு'

'முன்னேஸ்வர வரலாறு' என்னும் நூல் 8-8-68-ல் முன்னேஸ்வர கோவிலில் வெளியிடப்பட்டது. மேற்படி கோவிலைப்பற்றிய பூர்வீக வரலாறுகள் இந் நூலில் சிறந்த நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. போதனைப் பல்கலைக் கழகத்திலுள்ள சமஸ்கிருதப் பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக்குருக்களும் பிறரும் நூலைப்பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள்.

## பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில்

பொன்னாலை வரதராஜப்பெருமாள் இரதோற்சவம் (16-8-68) வெள்ளிக்கிழமையும், தீர்த்தத்திருவிழா மறுநாளும் நிகழும்.

## சைவ சமய வுண்மைகள்'

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காதல்கூர வெளிப்படலுங் கண்டுதொழுது மனங்களித்துப்
பாதமலர்கண் மேல்விழுந்தார் பத்திமுதிர்ந்த பாலகனார். 1258

**செய்யத் தகாதவை:**

இவ்வாறு சண்டேசர் பதவி பெற்ற விசார சருமனுக்குக் கோயில் சிவாலயத்தில் அபிடேகத் தீர்த்தத் தொட்டிக்கு அடுத்து அமைக்கப்படும். சிவபெருமானுடன் இடையறாத தியானத் தொடர்புடையராதலின் இவரது கோயிலுக்கும் சிவ தொண்டிற்கும் இடையே குறுக்கிட்டுப் போகலாகாது என்பது சிவாலயதரிசன விதிகளுள் ஒன்று. சிவ தரிசனம் சண்டேச தரிசனப் பிரார்த்தனையுடன் நிறைவேறுகிறது. சண்டேசர் கோயிலையடைந்து வணங்கிக் கைகளைத் தட்டித் தாம் பெற்ற சிவ நிர்மாலியப் பிரசாதங்களை அவரிடம் சேர்த்துச் சிவ தரிசன பலனைத் தரவேண்டுமென்று பிரார்த்தித்து அவர் பாற் பெற்ற விபூதியை அணிந்துகொள்ளவேண்டுமென்பது விதி.

"வழிபடுவோர் சண்டேச மூர்த்தியின் பேரில் தமது ஆடைகளின் நூலிழைகளை எடுத்துப் போடும் வழக்கம் ஒன்று பல கோயில்களிற் காணப்படுகிறது. இது பெருஞ் சிவாபராதமாம். சிவனுக்குச் சாத்திய நிர்மாலியமான ஆடையே சண்டேசருக்குச் சாத்தப்படுவதாகும். மக்கள் தாங்களணிந்து அசுத்தமான ஆடைகளின் இழைகளைப் போடுதல் மிகவும் அநுசிதமும் பாவமுமாகும்.

கடமை

சிவநேயச் செல்வர்கள் யாவரும் கோவில் வழிபாட்டுக்கு வரும் மக்களை இந்த அநுசிதமான வழிபாட்டை விட்டொழிக்கும்படி தகுந்த பிரசாரம் செய்யவேண்டும். பலர் அறியாமையால் இவ்விதமான பாபச் செயல்களைப் புரிந்து வருகின்றனர். இதுபற்றி மக்களுக்கு வேண்டியளவு விளக்கம் கொடுக்கப்படுதல் அவசியம். தேவை கண்டால் இதனை விளக்கி எழுதி சந்நிதிகளில் முக்கிய இடங்களில் எல்லோரும் பார்த்தறியக்கூடியதாக தொங்க விடப்பட வேண்டும். இது ஒரு சிறந்த சைவப் பணியாகும்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

நேயர்கள் நெஞ்சம்

### திருக்கேதீச்சரத்தில் வலம்புரிச் சங்கு

சென்ற 26-7-68 இந்துசாதனத்தில் "சமய அறிவு அவசியம்" என்ற தலைப்பில் திரு. பழ சண்முகஞ்செட்டியார் அவர்கள் அளித்த செய்திக்கு தாங்கள் எழுதிய அறிமுக உரையில், அப் பெரியார் திருக்கேதீச்சரத்தில "அபிடேகத்துக்கு வலம்புரிச் சங்கில்லை யென்பதை" யறிந்தார் என்று எழுதியுள்ளீர்கள். எமது தகப்பனார் காலஞ்சென்ற சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் தாம் அருமையாகப் பேணி வைத்திருந்த வலம்புரிச் சங்கை, ஏனைய பூசைப் பாத்திரங்களோடு திருக்கேதீச்சரத் திருக் கோயிலுக்கு நன்கொடையாக 1950-ஆம் ஆண்டில் வழங்கினார்கள். இச் செய்தி அக் காலத்தில் "இந்துசாதனம்" "தினகரன்" முதலிய செய்தித் தாள்களில் வெளி வந்துள்ளன.

"சித, மு. ப. சி" என்ற எம் தகப்பனாரின் பெயர் முதலெழுத்துக்கள் பதித்த பாத்திரங்கள் சில தினசரி உபயோகத்தில் இருப்பதை கோயிலுக்குச் செல்லும் எவரும் இன்றும் காணலாம். வலம்புரிச்சங்கை சமீபத்தில் கோயிற் கணக்கப் பிள்ளை திரு. காமாட்சியா பிள்ளை காட்டத் தாம் கண்டதாக ஒரு பொறுப்பு வாய்ந்தவர் கூறினார்.

சி. சிவகுருநாதன்

31-7-68.

### கதிர்காமத் திருத்தலம்

2-8-68 இந்துசாதனத்தில் வெளியான ஆசிரியஉரையும் கதிர்காமம் பற்றிய செய்திகளும் எம்மைப் பெருந்திகைப் புறச்செய்தன. ஆங்கு சைவ அன்பர்களின் உள்ளத்தைப் புண்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகளும் 'டுவிஸ்ட் நடனங்கள் 'பைலாப்பாட்டுகள் என்பனவும் மலிந்து வருவது வருந்தக் கூடியதொன்றாகும். எல்லாம நன்மைக்கே' 'ஒரு பொல்லாப்புமில்லை' 'எப்பவோமுடிந்த காரியம்' என்று சிவயோகச் செம்மல் யோகர்சுவாமிகள் கூறுவார்கள். 'எல்லாம் அவன் செயல்' என அமைதியாயிருப்போமாக. 'உயிர்கள் யாவும் முடிவில் இன்பப் பேற்றைப் பெறுதற்குரிய திருவுளக் குறிப்புடன் தத்தம சமய வழிநின்று ஒழுகுதல் வேண்டும். ஒவ்வொரு சமயத்தவரும் மற்றச் சமயத்தவரிடத்து உண்மையான அன்பு காட்டும அடிப்படையில் பெருமையுடையவர்களாய் தத்தம் சமயம் கூறும் அன்பு வழியில் நம்பிக்கை விசுவாசம் உடையவர்களாய் இன்னமதத்தவன் யான் என் மதம் கூறும் போதனைகளை என் இலட்சியமாகக்கொள்ளுவேன் எனும் உறுதியுடையவனாக விளங்குதல் முக்கிய கடனாகும். எல்லோரும் ஈழ மாதாவின் புதல்வர்கள் என்பதை மறவாது யாபேரும் அன்புவழி நிற்போமாக.

"காவன்னா — ஈனா"

யாழ்ப்பாணம், 7-8-68.

## தமிழை வளர்ப்பதெப்படி?

தமிழை வளர்க்க வேண்டுமானால் பல நூல்கள் வெளியிடப்பட வேண்டும். முற்காலத்தில் புலவர்கள் தமிழை வளர்த்து வந்தார்கள். ஆனால் தற்பொழுது நாம் எல்லோரும் தமிழை வளர்க்க முற்படுவோமாயின் அதுவே நாம் செய்யும் தமிழ்ப் பணியாகும். கல்லூரி அறிவில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் நூல்களை ஆராய்ந்து அறிவைப் பெருக்க முற்பட்டால் மாணவசமுதாயம் நல் நிலையை அடையும் என்பது நம்பிக்கை.

இவ்வாறு ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் வித்துவான் பொன் முத்துக்குமாரன் உரையாற்றினார்.

## நடையும் (எங்கள்) நடைப் பழக்கம்



பத்தர்: "திருக்கோவில் வழிபாட்டுக்கு வருவோர் கோயிற்திருவீதியை மூன்றுதரமோ, ஐந்து முறையோ, ஏழு தடவையோ வலம் வந்து வணங்குதல், அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம் என்னுமிவைகளைப் பக்தி பரவசத்துடன் செய்துவருதல் என்பவை இக்கால இளையோர் மத்தியில் சிறிது சிறிதாய் அருகிவரத்தொடங்கியிருக்கோ? என்ன!

சித்தர்: அப்படியில்லீங்க, நிலைமை இன்னமும் மோசமாய் போகவில்லை! எதுவும், நம்ம பழக்கத்திலை அமையவேணும பாருங்க; அதுவும் ஐஞ்சு(ம்)வயசில் வளையவேணும்? இதுகளை பழக்கத் தகுந்த ஆசான் களில்லை; வயது வந்தவர்கள் இன்று கைக்கொள்ளுவதை, இளையோர் பின்பற்றுவார்கள் தானே.....? சிலபிள்ளைகளுக்கு கோயிலில் விழுந்து வணங்க மனமிருந்தாலும் அவர்களது நாகரீக உடையும், (கட்டைப் பாவாடை, கட்டைக் காற்சட்டை, பட்டுப் பீதாம்பரங்கள், 'Terrlyn Shirt') அவற்றை அணியும் முறையும் இடந்தராது பாருங்கோ! இனி, 'இளவு வீட்டு'க்குப் போகும் போதும் 'கொண்டை மாலை' யணிந்துசெல்லுமளவுக்கு நாகரீகம் வளர்ந்திடுமோ? காலம்போறபோக்கைக்கண்டும் காணாதவராக வாழாவிருப்பதா? ஆசிரியர்கள்வழிகாட்ட வேணும் கோயில் வழிபாட்டுக்குப் போகும்முறையிற் போய், வழிபடும் நெறியில் நின்று வழிபட்டு உய்வோமாக...!

"நாயன்மார் - தாதன்"

## கடையிற் சுவாமி குரு வார அன்னசத்திரத்திற்கு பணம் பொருள் உதவியோர்கள்

1-5-67 தொடக்கம் 30-4-68 வரை.

### பண வரவு விபரம்

| | |
|---|---|
| S. கனகசபை (சிறும்பர்) | 50 00 |
| S. செல்லப்பா ஸ்ரான்லி வீதி | 50 00 |
| R. கணபதிப்பிள்ளை ஜெயமணியின் காவெட்டி | 25 00 |
| தா. திருநாவுக்கரசு அளவட்டி | 50 00 |
| சி. பாலசிங்கம் பிரப்பங்குளம் | 10 00 |
| க. சி. துரை நீராவியடி | 10 00 |
| நாகரட்ணம் செட்டியார் | 10 00 |
| வடிவாம்பிகை நாவலர்வீதி | 15 00 |
| த. முத்துசாமிப்பிள்ளை (அட்வகேட்) | 50 00 |
| வாழைமரம் விற்ற வரவு (130-00 கம்மிசன் 5 00) | 125 00 |
| மிஞ்சிய பொருள் விற்ற வரவு | 113 67 |
| இடுகு விற்ற வரவு | 41 25 |
| | 549 92 |

### பொருட்கள் வரவு

| | |
|---|---|
| மாப்பியன் மில் மானிப்பாய் | ஒரு மூடை அரிசி |
| K. சோமசுந்தரம் யாழ்ப்பாணம் | ஒரு மூடை அரிசி |
| மில்க் வைற் சோப் தொழிற்சாலை | ஒரு மூடை அரிசி |
| க. வீ. முருகேசு பெரியகடை | ½ புசல் அரிசி |
| S. M. S. பெரியகடை | ½ புசல் அரிசி |
| மு. குமாரசுவாமி பெரியகடை | ¼ புசல் அரிசி |
| ந. மகேசன் பெரியகடை | ¼ புசல் அரிசி |
| V. P. சதாசிவம் பெரியகடை | ¼ புசல் அரிசி |
| வளர்மதி ஸ்ரோஸ் | ¼ புசல் அரிசி |
| நா. இ. சிவலோகநாதன் பெரியகடை | ¼ புசல் அரிசி |
| பொ. முருகேசு பெரியகடை | ¼ புசல் அரிசி |
| S. [illegible]ராமையா செட்டியார் | ¼ புசல் அரிசி |
| R. C. மன்மதராயன் நாவலர் வீதி | ¾ புசல் அரிசி |
| சின்னம்மா நெல்லியடி | 10 சேர் அரிசி |
| A. S. சங்கரப்பிள்ளை பிரதர்ஸ் | 14 ரு மிளகாய், 28 ரு சீனி |
| A. S. சபாரத்தினம் | 14 ரு பருப்பு |
| க. கு. கந்தையாபிள்ளை பெரியகடை | 14 ரு சீனி வெள |
| K. K. A. K. பெரியகடை | ½ துலாம் புளி |
| ஆ. க. கனகசபாபதி பெரியகடை | 14 ருத் புளி |
| மு. குமாரசுவாமி | 4 ரு பருப்பு, 14 ரு உப்பு |
| பொ. வேலுப்பிள்ளை பெரியகடை | 14 ரு சி. வெங்காயம் |
| S. A. செல்லையா பிள்ளை பெரியகடை | 14 ரு பெ. வெங்காயம் |
| A. H. J. பெரியகடை | 28 ரு பெ. வெங்காயம் |
| C. S. கந்தையா செட்டியார் | 2 கலன் தே. எண் |
| S. K. முருகேசு | ½ ரு பூடு. ¼ ரு கடுகு |
| க. வி. க. பொன்னம்பலம் | 2 ரு அப்பளம் |
| S. சின்னத்துரை அன் பிறதர்ஸ் | 14 ரு சவ்வரிசி |
| கிருஷ்ணா ஸ்ரோஸ் | 14 ரு சவ்வரிசி |
| ஆ. வயித்திலிங்கம் அன் பிறதர்ஸ் | 2 ரு அப்பளம் |
| வ. க. குணரத்தினம் | 10 ரு அப்பளம் |
| ஆ. க. விஜயசித்தம்பி | 7 ரு வெங்காயம் |
| க. ஏ. சங்கரப்பிள்ளை | 9 ரு பருப்பு |
| N. M. T. P. | 14 ரு சீனி |
| C. S. ஆறுமுகம்பிள்ளை | 14 ரு து. பருப்பு |
| K. வேலாயுதம் | 20 ரு து. பருப்பு |
| S. சின்னத்துரை | 1 ரு கல்கொட்டை. 4 ரு சேமியா |
| கணபதி ஸ்ரோஸ் | 7 ரு சின் |
| கல்கமுவா ஸ்ரோஸ் | 14 ரு பெ. வெங்காயம் |
| மு. வே. யாலசிங்கம் | 2 ரு புளி |
| இ. ச' வேரம்பலம் | ½ ரு மிளகு |
| நா. இராமலிங்கம் இலுப்பையடி | 7 ரு சீனி, ½ ரு மிளகாய் |
| குமரன் மில் நாவலர் வீதி, 2 அகப்பை, ¼ ரு மஞ்சள் தூள், 1/4 கோப்பி, 2 ரு மல்லி, ½ ரு சீரகம். | |

### செலவு விபரம்

| | |
|---|---|
| இடுகு 1100 | 77 00 |
| தடி எடுத்துக் கொடுத்த வண்டிக் கூலி | 14 00 |
| சாக்கு, கயிறு | 6 30 |
| பந்தல் போட கூலி | 30 00 |
| இந்துசாதன பத்திரிகை | 2 50 |
| சமையற்க் காரர் | 72 00 |
| மரக்கறி, தேங்காய், வாழையிலை | 166 83 |
| தேனீர்ச் செலவு | 10 67 |
| கார்ச் செலவு | 22 80 |
| 5 வாளி | 36 25 |
| கடகம். சுளகு | 5 50 |
| இண்ணம், கோப்பை | 3 80 |
| பந்தல் பிடுங்கச் செலவு | 10 00 |
| வேலியடைக்கச் செலவு | 12 80 |
| விறகு | 12 25 |
| சில்லறைச் சாமான் | 11 65 |

### வரவு செலவு கணக்கு விபரம்

| | | |
|---|---|---|
| அன்பர்கள் வரவு | 270 00 | |
| வாழை மரம் விற்றது 130/- கொமிசன் கொடுத்தது 5/- | 125 00 | |
| மிஞ்சிய பொருள் விற்ற வரவு | 113 67 | |
| இடுகு விற்று வரவு | 41 25 | |
| பந்தல் செலவு | | 137 30 |
| மரக்கறி, தேங்காய், இலை | | 166 83 |
| சமையற் கூலி | | 72 00 |
| பிரயாணம் | | 22 80 |
| தேனீர். சாப்பாடு | | 10 67 |
| வாளி, இண்ணம் | | 39 25 |
| கடகம். சுளகு | | 5 50 |
| விறகு | | 12 25 |
| வேலியடைக்க | | 12 00 |
| சில்லறைச் செலவு | | 14 15 |
| இருப்பு ரொக்கம் | | 57 17 |
| | 549 92 | 549 92 |

### 30—4—68 ல் ஐந்தொகை

| | | |
|---|---|---|
| 1963—64 | மேலதிகச் செலவு | 37 99 |
| 1964—65 | ,, ,, | 36 99 |
| 1965—66 | ,, ,, | 95 75 |
| 1966—67 | கையிருப்பு தர்மகர்த்தா | 21 02 |
| 1967—68 | ,, ,, | 57 17 |
| | சி. வேலுப்பிள்ளை வசம் | 335 88 |

இங்ஙனம்,
தர்ம கர்த்தாக்கள்
சு. பொ. கந்தையா
ஆர். சி. மன்மதராயன்.

யாழ்ப்பாணம்,
7—8—68.

## சைவப்புலவர் பரீட்சைகள்

சைவ பரிபாலன சபை நடாத்தும் சைவப் புலவர் இளஞ் சைவப்புலவர் பரீட்சைகள் 29-8-68, 30-8-68, 31-8-68 ஆகிய மூன்று நாட்களிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம் 2-8-68.

க. கணபதிப்பிள்ளை
பரீட்சைக் காரியதரிசி.


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்களை வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 8 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

— மனேஜர்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

வயித்திலிங்கம் இளையதம்பி குமாரசாமி கைம்பெண் விசாலாச்சி. வல்வெட்டி வல்வெட்டித்துறை இறந்த வயித்திலிங்கம் இளையதம்பி குமாரசாமியின் தத்துவகாறி —வழக்காளி.

1. காசியர் பொன்னுத்துரையும்
2. பெண் செல்வமணியும் இருவரும், வல்லை றோட்டு அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 8489 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1968-ம் ஆண்டு புரட்டாதி மாசம் 13-ம் திகதி (13-9-68) வெள்ளிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபா 1975-00 ம், 29-9-1966 தொடக்கம் 13-7-67 வரை 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகையும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 241-40. இதில் தீர்வைத்தொகையில் 9-2-68 ல் கொடுபட்ட ரூபா 1200-00 ம், கோட்டுச் செலவில் ரூபா 100-00 கழித்து அறவிடப்படும்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்கு அச்சுவேலி கோவிற்பற்று, அச்சுவேலி வடக்குஇறை "காட்டுரியான்' விலப்பரப்பு 4 இந்த விலப்பரப்பு நாலுக்கும் எல்லை கிழக்கு வல்லி ஆழ்வானுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம், வடக்கு ஞானசேகரர் அருளம்பலத்திற்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம், மேற்கு கணபதிப்பிள்ளை சின்னத்துரைக்கும் பெண் மங்கயற்கரசிக்கும் உரிய ஆதனம், தெற்கு மேற் சொல்லப்பட்ட எதிரிகளுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம்.

2. ஷை இறை 'காட்டுரியான் வயல்" நெற் பரப்பு 2. இதில் அறுதி விற்ற நெற் பரப்பு குளி 5 1/2 பிற நீக்கலாகவும் இத மிகுதி நெற் பரப்பு 1 குளி 6 1/2 க்கும் எல்லை கிழக்கு கந்தன் சபாபதியின் ஆதனம், வடக்கு வயிரவன் ஆழ்வானுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். மேற்கு பொன்னுத்துரை பெண் செல்வமணிக்கு உரிய ஆதனம், தெற்கு றோட்டு.

கா. தர்மலிங்கம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

உரும்பராய், 17-7-68,
(எம். 135 9-8-68)

## திருக்கேதீச்சரம் மகா கும்பாபிஷேகம்

திருக்கேதீச்சரம் ஸ்ரீ கௌரி அம்பாள் சமேத கேதீச்சரநாதர் ஆலயத்தில் ஆவணி மாதம் 3-ந் திகதி (19-8-68) திங்கட்கிழமை காலை 6-00 மணி தொடக்கம் 7-00 மணி வரையிலுள்ள சுபமுகூர்த்த வேளையில் இவ்வாலய இராஜ கோபுரத்திற்கும் பரிவாரத்தில் அமைக்கப் பெற்றிருக்கும் விஷ்ணு, சோமாஸ்கந்தர், பஞ்சலிங்கம், ஆறுமுகசுவாமி, பைரவர், பள்ளியறை, யாகசாலை ஆகிய ஆலயங்களுக்கும் அவ்வாலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பெறும் மூர்த்திகளுக்கும் மற்றும் மூலமூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறவிருக்கின்றது கிரியைகள் 17-8-68 சனிக்கிழமை ஆரம்பமாகின்றது 19-8-68 காலை 6-05 மணிக்கு தூபிகள் கும்பாபிஷேகமும் பின் மகாகும்பாபிஷேகமும் நடைபெறும் அன்று பகல் விசேட பூசை அன்னதானம் முதலியனவும் இரவு திருக்கல்யாணம், திருவீதிஉலா என்பனவும் நிகழும். சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள் பிரதம குருவாகக் கடமையாற்றுவார்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

D. C. J.

இல M B. 6245

1. வேலுப்பிள்ளை இராசையா
2. பெண் தவமணி

புலோலி கிழக்கு, பருத்தித்துறை —வழக்காளிகள்

எதிராக

1. வல்லிபுரம் பொன்னுத்துரை. 2 ஐயன் கைம்பெண் கன்னிப்பிள்ளை, பருத்தித்துறைறோட்டு நல்லூர். யாழ்ப்பாணம், —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 6245 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1968 ம் ஆண்டு ஆவணி மீ 24 உ சனிக்கிழமை பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2700/- ம் 7-12-63 தொடக்கம் 7-6-64 வரைக்கும் ரூபாய் 2000/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 264-55 சதம். ஏற்பட்ட செலவு ரூபாய் 167-10 சதம் முடிவான செலவு ரூபாய் 50-75 சதம். நிகழவிருக்கும் செலவு 28-70 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வண்ணார்பண்ணை வடகிழக்குப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார் பண்ணை இறை நீர் கொச்சியடி விலப்பரப்பு 1 குளி 9 இணறும் வீடும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு பொன்னுத்துரை பெண் அன்னபூரணமும் ஒழுங்கை முகப்பும், வடக்கு செல்லப்பா துரைராச சிங்கத்தினுதனமும், மேற்கு செல்லப்பா மகள் நாகபூசணி அர்மாவினுதனம்மும் மறுவும், தெற்கு குறுக்கு ஒழுங்கை. (bye lane) பதிவு இலக்கம் D 265/61,

மா. முருகேசு, J. P.
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"இந்திரபவனம்"
புங்குடுதீவு, 16-6-68,
எம். 140. 9-8-68

## கிளியூர் சிவாலயமும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்திகப் பெருமக்கள் திரு. கே. கிருஷ்ண மூர்த்தி செட்டியார், ஈஸ்வரியின் கோயில் மானேஜர். கிளியூர் போஸ்ட்டு, திருக்கோயிலூர் தாலுக்கா தென்னாற்காடு ஜில்லா, சென்னை ராஜ்யம்; என்ற முகவரிக்கு நிதியுதவி அனுப்பி வைக்க வேண்டுமென்று கோரப்படுகின்றது.

திருமுருக. கிருபானந்த வாரியாரவர்கள் ஆடி அமாவாசை அன்று தில்லையில் திருப்புகழ் சபையில் சொற்பொழிவு நிகழ்த்துகையில் முன்னாள் இராணுவத்தினரான திரு. செல்லப்பனவர்களின் சிவ தொண்டைப் பாராட்டியும் சிவனகோயில் கட்டட வேலைகள் பூர்த்தி பெற்று மகாகும்பாபிஷேகம செய்யவும் அன்பரின் சபதம் பூர்த்திபெறவும் பொருள் உதவி வழங்கும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம் M. B 8117
கனகசபை நவரத்தினம்
மாவிட்டபுரம்
—வழக்காளி
எதிராக
இராமலிங்கம் கனகரத்தினமும்
பெண் பாக்கியமும்
மாவிட்டபுரம்
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 8117-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1968 - ஆம் ஞூ புரட்டாதி மீ 1 ௨ (1-9-68) ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 4458 – 75 -ம 16-4-66 தொடக்கம் 31-1-67 வரைக்கும் ரூபா 3000 -க்கு 9 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 280 சதம் 89 இதில் 6-11-1967 ல் ரூபா 2000 கொடுபட்டது கோட்டுச் செலவால் ரூபா 150/- கொடுபட்டது.

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவில் பற்று மாவிட்டபுரமிறை 'அமதிதனுபதி'' நிலப் பரப்பு 8 குளி 3 ம் செய்பயிர் வாய்பயிர்களும் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றுப் பங்கும், இதற்கெல்லை கிழக்கு சண்முகம் கதிரித்தம்பிக்கும் விநாயகர் தில்லையருக்குமுரிய வாதனம். வடக்கு மாரிமுத்து நாகலிங்கத்தினுதனமும் கிணறும். மேற்கு வயிரமுத்து ஏகாம்பரத்துக்குரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை இதடங்கலும். பதிவு இலக்கம் H 234/21

மு. நவரத்தினராசா,
கோமிசனரும்விலைமதிப்பாளரும்,
"கமலபதி"
ஆஸ்பத்திரி வீதி,
மண்டைதீவு 23-7-68
எம் 121, 9-8-68

---

## பிழை திருத்தம்

அதை இப்படி வாசிக்கவும்

26-7-68-இல் வெளி வந்த 'இந்துசாதனம்' இதழில் பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு வழக்கு இலக்கம். 9261 என்ற விற்பனவு விளம்பரத்தில் விற்பனவுத் திகதி புரட்டாதி மீ 27 ந் திகதி (27-9-68) என்று இருப்பதை ஆவணி மீ 27 ந் தேதி (27-8-68) என்று திருத்தி வாசிக்கவும்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல. M B 8463
முத்துக்குமாரு குமாரசாமியும் பெண் செரீணைஸ்வரியும்
அரியாலை மேற்கு யாழ்ப்பாணம
எதிராக வழக்காளி
கார்த்திகேசு நாகமுத்து அரியாலை மேற்கு யாழ்ப்பாணம்
—எதிராளி
தற்பொழுது அவ்வாய்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8463-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1968-ஆம் ஞூ புரட்டாசி மாதம் 23-ந் உ திங்கட்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல்வட்டி ரூபா 3180-ம 17-9-66 தொடக்கம 16-9-67 வரைக்கும் ரூபா 2000 -க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 386-00.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சியாதெரு இறை "அருமண்புலமும் கருணை புலமும்'' 1951-ம் ஆண்டு ஆடி மீ 11-ந் உ 42/1951 ம் இலக்கமிட்ட S. முத்துக்குமாரசாமி உத்தரவுபெற்ற நில அளவைச்சாரனின் படத்திலுள்ள 2-ம் இலக்கத் துண்டிற்கு பர நில இலா 2 குளி 14 ம் வீதம் குசினியும். இந்தப் பர. நில. இலா 2 குளி 14 க்கும் எல்லை கிழக்கு தம்பு கந்தையா வினுதனம். வடக்கு சிதம்பரம் கோவிந்ததனமும் சுவாமிநாதர் இளையதம்பியினுதனமும் மேற்கு செல்லர் சிவநாமத்துக்கும் பெண் நவமணிக்குமுரிய குறிக்கப்பட்ட ஷை படத்திலுள்ள 1ம் இலக்கத் துண்டும், இக் காணிக்கும் 1-ம் 3ம் இலக்க காணிகளுக்கும் பொதுவாக விடப்பட்ட ஷை படத்தில் 5 ம் இலக்கத்தில் குறிப்பிட்ட 7 குளி விசாலங்கொண்ட வைவெ முன்னை முகப்பும் தெற்கு ஷை படத்தில் குறிப்பிட்ட 3 ம் இலக்கத் துண்டு தற்பொழுது பொன்னையா தவமணிக்கும் பெண் தங்கம்மாவுக்குமுரிய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்ட நிலம் பயிர் கிணறு அடங்கலும் ஷை படத்தில் 1-ம் இலக்கத் துண்டிற்கு 4-ம் இலக்கத்தில் குறிப்பிட்ட கிணறு துரவை ஆடுகால் துலாவிற்கு விடப்பட்ட $4\frac{1}{2}$ குளியிலும் கிணறு ஆடுகால் துலா துரவையிலும் 1 ம் இலக்கத் துண்டிற்குரிய அரைவாசிப் பங்கும் வழிவாய்க்காலும் புறநீக்கலாக மிகுதி அடங்கலும் இன்னும் குறித்த பிளானில் 5ம் 1-ம், 2-ம், 3-ம் இலக்கத் துண்டுகளுக்குப் பொதுவாக விடப்பட்ட 7 குளி விசாலங் கொண்ட பாதைக்குள் நிற்கும் மாவில் இதற்குரிய பங்கும்.

"வேல்பதி" சி. சங்கரப்பிள்ளை,
புத்தூர், 31-7-68. கோமிசனரும் விலைமதிப்பாளரும்.
எம் 138, 9-8-68.

---

## Commission Sale

## கோட்டுக் கொம்மிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இலக்கம்: 9750

1. காசியன் கணபதி
2. காக்கியன் பாலன், இமையாணன் குறிச்சி -வழக்காளிகள்

எதிராக

1. கந்தன் சின்னவன், 2. கறுவல் பாலன், 3. அவர் மனைவி மாணிக்கம், 4. சின்னவன் சிவலிங்கம். 5. சின்னவன் கற்கண்டன், 6. சடையன் மகள் வள்ளி. சமரபாகுதேவன் குறிச்சி -எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனங்களை 1968 ம் ஆ செப்டம்பர் மாதம் 16 ந் திகதி (16-9-68) திங்கட்கிழமை முறபகல் 9-30 மணி அளவில் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராச்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று 1. சமரபாகுதேவன் குறிச்சியிறை குருக்காட்டு ஆட்சிப்படி கில. 4 1/2 இதில் மேற்கரைவாசிக்கு கில. $2\frac{1}{4}$. எல்லை கிழக்கு வேலன் பொடியனுக்கும மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு பின்னாற் காணப்படும் 2-ம் ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு இராமலிங்கம் தாமோதரம்பிள்ளையின் உரிமையாளருக்குடைய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்டவை யடக்கலிற் சொரியலாய் எட்டில் ஏழு பங்கும் 7/8.

2. இமையாணன் குறிச்சி இறை இலந்தைக்காடு கில. $2^2$ இதில் தெற்குப்புறமாக மூன்றில் ஒரு பங்கும் கில. 7 குளி 6 எல்லை கிழக்கு வேலன் பொடியனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு ஆழ்வான் கணபதிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு வல்வெட்டித்துறை அம்மன் கோவிலுக்குடைய ஆதனமும் ஒழுங்கையும் தெற்கு மேற்குறித்த 1 ம் ஆதனம் இவ் வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகள், வேம்புகள் அடக்கலிற் சொரியலாய் முன்னூற்றிருபதில் ஐம்பத்தொரு பங்கும் (51/320.)

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை | ரூபா | 2162-5 |
| வட்டி ரூபா 1500/- க்கு 10 வீதப்படி 4-9-67 தொடக்கம் 10-1-68 வரை | ரூபா | 52-50 |
| வட்டி ரூபா 2215/- க்கு 5 வீதப்படி 10-1-68 தொடக்கம் 6-7-68 வரை | ரூபா | 64-60 |
| செலவுத்தொகை | ரூபா | 308-59 |
| மொத்த ரூபா | | 2588-19 |

சிவலிங்கநிலையம், தியாகர் கதிர்காமத்தம்பி நல்லலிங்கம்
வி எம். றோட் ஏலவிற்பனை ஆணையாளர் & விலைமதிப்பாளர்
பருத்தித்துறை. Commissioner of Sales, Auctioneer & Valuer
"Sivalinga Nilayam"
V. M Rd; Point Pedro
3-8-68. எம், 139 9-8-68

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
சங்கானை கிழக்கு சங்கானை, ஆறுமுகம் நவரெத்தினம் —வழக்காளி
இல. M B 7047 எதிராக
பத்தைமேனி தற்பொழுது அப்பகாற் கோர் லு:-
1. பொன்னுத்துரை சின்னத்தம்பியும் பெண்
2. சிவபாக்கியமும் பத்தைமேனி.
3. பத்தைமேனி, நடராசா கந்தசாமி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7074 ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும ஆறு துண்டுக்காணிகள் 1968 ம் ஞூ புரட்டாதி மீ 27 ம் உ முற்பகல் 10-00 மணிக்கு முதலாம் காணியும், 10-30 மணிக்கு இரண்டாம் காணியும், 11-30 மணிக்கு 4-ம் காணியும், 28 ம் உ (28-8-68) முற்பகல் 10-00 மணிக்கு 3-ம் காணியும்; 11-00 மணிக்கு 5 ம் காணியும். 11-30 மணிக்கு 6 ம் காணியும் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 8422-21 சதம் இன்னும் ரூபாய் 5000/- தனுக்கு 13-11-64 தொடக்கம் 7-12-65 வரைக்கும் 8 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும கோட்டுச்செலவு ரூபாய் 345-43 சதமும். இதில் ரூபாய் 2500/- கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பிரிவு அச்சுவேலி கோயிற்பற்று பத்தைமேனியிறை "சப்புறம்பாய'' பர. கில. இலா 24-0 குளி இதற் கெல்லை கிழக்கு யாழ்ப்பாணம் பிஸ்பாணடவரினுதனம், வடக்கு றோட்டு மேற்கு பெதுருப்பிள்ளையினுதனம், தெற்கு முடிக்குரிய வாதனம இதடங்கலும். பதிவிலக்கம் K 146/173,

2. ஷை பத்தைமேனி 'தம்பனை'' பர. கில. இலா 4-0 குளி. இதற் கெல்லை கிழக்கு சுடுகாடு, வடக்கு வெற்றிமடப பிள்ளையாரினுதனம், மேற்கு குசைப்பிள்ளை பெண் ரோசம்மாவினுதனம், தெற்கு றோட்டு இதடங்கலும். பதிவிலக்கம் K 146/174,

3. ஷை பத்தைமேனி "பீசையோடை தோட்டம்'' பர. கில. இலா 18 7/8-0 குளி இதற்கெல்லை கிழக்கு வேலுப்பிள்ளை இரத்தினத்தினுதனம், வடக்கு பொன்னம்பலம் சரவண முத்துவினுதனம். மேற்கு சின்னத்தம்பி பெண் சிவபாக்கியத்தினுதனம். தெற்கு முருகேசு கல்லசம்பியி னுரிமையாளரினுதனம் இதடங்கலில் 1/9 பங்கு பதிவிலக்கம் K 170/89,

4. ஷை பத்தைமேனி "முதலைகுளி வயல்'' பர. கில. இலா $42\frac{1}{2}$-0 குளி இதற்கெல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பொன்னையாவினுதனம், வடக்கு உபயோக மற்ற தரவை, மேற்கு வல்லிபுரம் ஐயாத்துரைக்கும் சகோதரங்களுக்கும், ஆறுமுகம் பெண் பொன்னம்மாவுக்குமுரிய வாதனங்கள், தெற்கு உளமும் சின்னத்தம்பி பெண் சிவபாக்கியத்துக்குமுரிய வாதனம் இதடங்கலில் 1/9 பங்கு. பதிவிலக்கம் K 170,91.

5. ஷை கதிரிப்பாய் "குயவிளான்'' பர. கில. இலா 80. இதற் கெல்லை கிழக்கு காசிப்பிள்ளை இரத்தினசாமிக்கும முத்தர் சின்னப்புவுக்கும் உரிய வாதனம். வடக்கு கறுத்தார் ஆன்வாருக்கும் மற்றவர்கட்குமுரிய வாதனம். மேற்கு பொன்னம்பலம் சரவணமுத்துவிற்கும் மற்றவர்கட்குமுரிய வாதனம். தெற்கு பத்தைமேனி கிராம எல்லை. இதடங்கலில் 1/4 பங்கு. பதிவிலக்கம் K 95/105.

6. ஷை கதிரிப்பாய் இறை "இராக்கிரி'' பர கில. இலா 48-0 இதற்கெல்லை கிழக்கும் மேற்கும் முருகர் தம்பிப்பிள்ளையினுரிமையாளரினுதனம், வடக்கு சின்னப்பு நடராசாவுக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் தெற்கு பத்தைமேனி கிராமஎல்லை இதடங்கலில் பிரிவிடப்படாத $\frac{1}{2}$ பங்கு. பதிவிலக்கம் K 195/106.

செ. விசாகரத்தினம்
133, பருத்தித்துறை றோட்டு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
நல்லூர், யாழ்ப்பாணம், 12-7-68. M 136 9-8-68

---

## கோட்டு விற்பனவு விளம்பரம

தையல் நாயகி சோமசுந்தரம் வட்டுக்கோட்டை மேற்கு
வட்டுக்கோட்டை — வழக்காளி
இல. M B 8392 எதிராக
(1) சுந்தரம் ராஜரத்தினமும் அவர் மனைவி
(2) ராஜேஸ்வரி வண்ணார்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம்
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B. 8392-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1968 ம் ஆ ஆவணி மாதம் 29 ம் திகதி (29-8-68) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 1912-50 சதம். 14-8-66 தொடக்கம் தீர்வையாகிய திகதி 5-9-67 வரைக்கும் ரூபாய் 1500 க்கு 10 சத வீத வட்டியும் அதன் பின் இறுக்கும்வரை முழுத் தொகைக்கும் 5 சத வீதம் வட்டியும் ரூபாய் 272-37 சதம் கோட்டுச் செலவும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கிழக்கு வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை இறை "மூடபி வழவு'' குளிகள் 16-ம் 3/8ம வீடும் கிழக்குப் பக்கமாக இருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்காலும் எல்லை கிழக்கு சங்கரப்பிள்ளை கந்தசாமியின் பெண் தையல்நாயகியின் ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு ஏகலியன் கதிர்காமனின் ஆதனம் தெற்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குரிய காணி. இதடங்கலும். பதிவு செய்யப்பட்ட இலக்கம் D 242/8.

ச. அ. மரியாம்பிள்ளை,
4, சென் ஜேம்ஸ் கிழக்குவீதி, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம், 17-7-68. (எம். 137 9-8-68.)

---

மலாயனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக கோபுரவாயில்
நிலவிய கற்பகக்கன்றி னிறைமலர்த்தா ளிணைபோற்றி.

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 9-8-1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.